## சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படையில் பணிநியமனம் – திரு.மா.கார்த்திகேயன் (த/பெ. (லேட்) ச.மாரியப்பன்) இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (ஏடி2) துறை**

அரசாணை (2ப) எண்.20

நாள்: 10.02.2021

திருவள்ளுவர் ஆண்டு 2051
சார்வரி, தை – 28

படிக்க:-

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் (எம்) துறை, நாள். 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத் துறை, நாள். 23.01.2020.
3. மருத்துவம் (ம) ஊரக நலப்பணிகள் இயக்குநர் (தொஅஈ) அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடித ந.க.எண்.53861/நிபி8/1/2020, நாள் 27.11.2020.

******

**ஆணை:-**

பார்வை மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் மருத்துவம் (ம) ஊரக நலப்பணிகள் இயக்குநர், தர்மபுரி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் சமையலராகப் பணியாற்றிய திரு.ச.மாரியப்பன் என்பவர் 10.12.2002 அன்று பணியிடையே மரணமடைந்து விட்டார் என்றும், அவர் அப்பணியில் தகுதிகாண் பருவம் நிறைவு செய்துள்ளார் என்றும், அவரின் பிறந்த தேதி 30.05.1949 என்றும், பணியிலிருந்திருப்பின் அவருடைய உத்தேச ஓய்வு பெறும் நாள் 31.05.2009 என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும் இறந்த அரசு ஊழியரின் மனைவி தனது மகனுக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வேண்டி 28.11.2005 அன்று விண்ணப்பித்துள்ளார் என்றும், இறந்த அரசு ஊழியரின் மகன் தனக்கு பணிநியமனம் வேண்டி 18.05.2007 அன்று விண்ணப்பித்திருந்தார் என்றும், அவரது பிறந்த தேதி 29.09.1986 என்றும், மனுதாரராகிய திரு.மா.கார்த்திகேயன் என்பவர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் பெறுவதற்கான ஏனைய தகுதிகளையும் பூர்த்தி செய்திருந்ததால், அவரை தற்காலிகமாகக் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளராக பணியமர்த்த உத்தரவிடப்பட்டு, அதன்படி இளநிலை உதவியாளராக 11.12.2019 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார் என்றும் தெரிவித்து, திரு.மா.கார்த்திகேயன் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 11.12.2019 முற்பகல் முதல் அவரது பணியை வரன்முறை செய்து ஆணை வெளியிடுமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மருத்துவம் (ம) ஊரக நலப்பணிகள் இயக்குநரின் கருத்துருவை அரசு நன்கு பரிசீலித்து, அதனை ஏற்றுக்கொண்டுள்ளது. அதன்படி திரு.மா.கார்த்திகேயன், இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை, அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் சேர்ந்த நாளான 11.12.2019 முற்பகல் முதல் அவர் அப்பணிக்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன் தேதியிட்டு பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுவதன் மூலம் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவையிருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறையின் இசைவுகளை முறையே அவற்றின் அ.சா.எண்.1100/க்யூ1/2020–1, நாள் 22.01.2021 மற்றும் அ.சா.எண்.2453/ஜி2/2020–1, நாள் 29.01.2021–இல் பெற்று வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஜெ. ராதாகிருஷ்ணன்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**பெறுநர்**

மருத்துவம் (ம) ஊரக நலப்பணிகள் இயக்குநர், சென்னை–600 006.
திரு.மா.கார்த்திகேயன், இளநிலை உதவியாளர் (உரிய வழியாக)
மாநில கணக்காயர், சென்னை–600 018.

**நகல்**

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறை, சென்னை–600 009.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (தகவுப்பிரிவு) துறை, சென்னை–600 009.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

11/2/2021

**பிரிவு அலுவலர்**

11/2/2021